# ஜெயகாந்தனின் உண்மை சுடும்
# Jayakanthanin Unmai Sudum

முனைவர் உமா அழகிரி
Dr Uma Allaghery

"TAM 2001 Y (3) : Session 4.4 Jayakanthanin Unmai Sudum(PPT)" by Dr Uma Allaghery(2024), Mahatma Gandhi Institute is licensed under CC BY 4.0

# ஜெயகாந்தன் பற்றிய குறிப்புகள்

- தலைச் சிறந்த எழுத்தாளர்களுள் ஜெயகாந்தன் ஒருவர் ஆவார்.
- அவரிடம் ஆற்றலும் தனித்துவமும் ஆளுமையும் உள்ளன.
- அவர் சிறந்த எழுத்தாளர் மட்டுமல்லாமல் கட்டுரையாளராகவும் பத்திரிகையாளராகவும் விளங்குகிறார்.
- அவர் ஞான பீட விருது பெற்ற ஒரு படைப்பாளர்.
- அவர் தமிழ் இலக்கியப் பணிக்குப் பத்ம பூஷன் விருது பெற்றுள்ளார்.
- இவற்றைத் தவிர அவருக்கு இன்னும் பல விருதுகள் வழங்கப்பட்டன.

# இலக்கியத்தில் அவருடைய ஆர்வம்

- கமியூனிஸ்ட் உறுப்பினர்களின் கலந்துரையாடல்களை அடிக்கடி கேட்டதால் அவர் இலக்கியத்தில் அக்கறை காட்டத் தொடங்கினார்.
- அப்போது அவர் தமிழிலக்கணத்தையும் தமிழிலக்கியத்தையும் முறையாகக் கற்றுக்கொண்டார்.
- பணிகளுக்கிடையில் அவருக்கு ஓய்வு கிடைக்கும்போதெல்லாம் அவர் எழுதுவதில் ஆர்வம் காட்டினார்.

# ஜெயகாந்தனின் படைப்புலகம்

- 1950களில் ஜெயகாந்தன் படைப்புகள் வெளியிடப்பட்டன.
- சரசுவதி, தாமரை, ஆனந்த விகடன் முதலிய இதழ்களில் அவருடைய படைப்புகள் வெளியாயின.
- அவருடைய படைப்புகளை வாசகர்கள் பலர் ரசித்துக்கொண்டனர். மக்கள் மத்தியில் அவருக்கு ஒரு நல்ல வரவேற்பு இருந்தது.
- இதனால் அவருக்குப் புகழ் சேர்ந்தது.
- திரையுலகிலும் அவர் நாட்டம் கொண்டார்.
- அவர் படைத்துள்ள ‘சில நேரங்களில் சில மனிதர்கள்’ என்னும் புதினம் திரைப்படமாக வெளியானது.

# ஜெயகாந்தன் படைப்புகள்

- ஜெயகாந்தன் வாழ்க்கை வரலாறு, சிறுகதைகள் தொகுப்பு, குறுநாவல்கள், நாவல்கள், கட்டுரைகள் முதலியவை படைத்துள்ளார்.
- அவருடைய கதைகள் திரைப்படங்களாக அமையப்பட்டன.
- அவரே சில திரைப்படங்களை இயக்கினார்.
- அவர் இயக்கிய திரைப்படங்களுள் ஒன்று ‘உன்னைப் போல் ஒருவன்’.
- அவர் படைத்துள்ள ‘ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்’ என்னும் நாவல் ஆங்கில மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

# உண்மை சுடும் என்னும் சிறுகதையின் பாத்திரங்கள்

- உண்மை சுடும் என்பது ஜெயகாந்தன் படைத்துள்ள சிறுகதைகளுள் ஒன்று.
- கதைப் பாத்திரங்கள்:
- சோமநாதன் – ஆங்கிலப் பேராசிரியர் ; முதன்மைப் பாத்திரம்
- கோதை – சோமநாதனுடைய மருமகள்; துணைப் பாத்திரம்
- பரமேசுவரன் – சோமநாதனுடைய மாணவன்;தமிழ்ப் பேராசிரியர்; கோதையின் கணவன்; துணைப் பாத்திரம்

# இக்கதையில் சோமநாதனின் பங்கு

- பரமேசுவரனுக்கு இவர் வணக்கத்துக்குரிய மேதைகளுள் ஒருவர் ஆவார்.
- கோதைக்குரிய திருமண ஏற்பாடு செய்துள்ளார்.
- பரமேசுவரனுக்குத் திருமணத்தைப் பற்றித் தயக்கம் இருந்தபோது வழிகாட்டினார்.
- கோதையுடைய இல்லற வாழ்க்கையைப் பற்றி அறிய சென்னைக்கு வந்தார்.
- கோதையும் பரமேசுவரனும் இல்லற வாழ்க்கை நன்றாக அமைந்துள்ளதைக் கவனித்து மகிழ்ச்சி அடைந்தார்.
- ஒரு 'மொட்டைக் கடிதம்' வந்தபோது உண்மையை அறிய விரும்பிய பரமேசுவரனுக்கு, "உண்மையைத் தேடியா? அது எதுக்கு நமக்கு? அது சகலமும் துறந்த துறவிகளின் தொழிலாச்சே," என்ற அறிவுரை கூறியுள்ளார்.

# இக்கதையில் சோமநாதனின் பங்கு

- "இறந்தகாலம் இறந்துவிட்ட காலமாகவே போகட்டும்," என்று சோமநாதன் திருமணத் தீர்மானத்தைப் பற்றிக் கோதைக்கு அறிவுரை கூறினார்.
- பரமேசுவரனுக்குப் பிரம்மச்சாரியத்தின் அர்த்தத்தை உணர்த்தி வாழ்க்கையைக் கட்டினார் சோமநாதன்.
- 'மொட்டைக் கடிதம்' என்பதைப் பற்றிப் பரமேசுவரன் அவரிடம் கேட்டபோது 'பொய்' எனச் சொன்னதால் பரமேசுவரன் அவரை மன்னிக்க முடியாது என்ற மனப்போராட்டத்தில் இருந்தான்.
- "சில உண்மைகள் நெருப்பு மாதிரி. அதைத் தாங்க ஒரு பங்குவம் வேண்டும். இதை மாமனுக்குப் போய்ச் சொல்கிறேன்," என்று கோதை சொல்லி, பெட்டியுடன் கிளம்பியபோது பரமேசுவரன் அவளைத் தடுத்தான். அவள் இல்லாமல் அவனால் வாழ முடியாது என உணர்ந்தான்.

# சிறுகதையிலுள்ள கருத்துகள்

- பரமேசுவரனுக்குச் சோமநாதன் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய ஆசானாக விளங்கினார்; பரமேசுவரனுக்கும் சோமநாதனுக்கும் இடையில் உள்ள உறவு சிறப்பு வாய்ந்தது. அவர் நண்பனாகவும் வழிகாட்டியாகவும் ஞானாசிரியராகவும் விளங்கினார்.
- கோதை காதலில் ஏமாற்றம் அடைந்தாள்; திருமணம் வேண்டாம் என்று மனக் கசப்புடன் சொன்னாள்; ஆனால், வாழ்க்கையைத் தொடர வேண்டும் என்று கோமநாதன் அவளுக்கு வழிகாட்டினார்;
- பெண்ணுக்கு மறுவாழ்க்கையைக் கொடுக்க வேண்டும் என்ற கருத்து இக்கதை மூலம் புலப்படுத்துகிறார் படைப்பாளர் ஜெயகாந்தன்.
- பரமேசுவரனுக்கும் கோதைக்கும் அதிக வயது வேறுபாடு இருந்தும் அவர்களுடைய இல்லற வாழ்க்கை நன்றாக அமைந்துள்ளது. இல்லற வாழ்க்கையில் கோதை மகிழ்ச்சியாக இருந்தாள்.

# சிறுகதையிலுள்ள கருத்துகள்

- கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் பரஸ்பர உணர்வு இருக்க வேண்டும்;
- மொட்டைக் கடிதத்தைப் படித்த பிறகு பரமேசுவரன் மனதில் மனக்கலக்கம்; அவன் கோதைமீது கோபம் கொள்ளவில்லை. ஆனால், சோமநாதன் கோதையின் காதல் பற்றிய செய்தியைச் சொல்லவில்லை, என நினைத்து மனம் வருந்தினான். உளவியல் அடிப்படையில் பரமேசுவரனுடைய நடத்தை இயல்புதான்.
- கோதை பெட்டியுடன் கிளம்பியபோது அவளைப் பிரிய விரும்பவில்லை அதனால் அவளைப் பார்க்க வெளியே ஓடி வந்தான்; படைப்பாளர் ஜெயகாந்தன் ஒரு மறுமலர்ச்சி கொண்டுவர விழைந்துள்ளார். கோதை இல்லாமல் பரமேசுவரனால் வாழ முடியாது. கடந்த வாழ்க்கையுடைய சம்பவத்தால் இக்கால வாழ்க்கைக்கு எந்தப் பாதிப்பும் இருக்கக் கூடாது எனக் காட்டுகிறார் கதையாசிரியர் ஜெயகாந்தன்.

# கதையிலுள்ள கருத்துகள்

- திருமணம் என்பதன் அர்த்தத்துக்கு விளக்கம் கொடுக்கிறார் படைப்பாளர்; தனக்காக வாழாமல் ஒருவனோ ஒருத்தியோ இன்னொருவருக்காக வாழ்வதுதான் திருமணத்தின் ஆரம்பம்.
- கோதை பரமேசுவரனுடைய வாழ்க்கைக்கு முழு அர்த்தத்தை உருவாக்கியுள்ளாள்;
- கோதை தன் காதலைப் பற்றிப் பரமேசுவரன் அவளிடம் கேட்டபோது அது உண்மை எனக் கூறியுள்ளாள். அதைப் பற்றி மறைக்கவில்லை; இது பரமேசுவரனுக்குப் பிடித்தது; அவன் தன் மனைவியை ஏற்றுக்கொண்டான்.